


**27. 03. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் ஊரடங்கு தொடர்பாக பரவும் வதந்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்..

2. வணிக ரீதியிலான சமையல் எரிவாயு ஒதுக்கீட்டை மாநிலங்களுக்கு 70 சதவிகிதமாக அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

3. தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலில் உள்ள தமிழகம், புதுச்சேரி யூனியன் பிரதேசம் உள்ளிட்ட 5 மாநிலங்கள் நீங்கலாக ஏனைய மாநில முதலமைச்சர்களுடன் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று கலந்துரையாடுகிறார்.

4. திமுக, அஇஅதிமுக கூட்டணியின் சார்பாக போட்டியிட உள்ள வேட்பாளர்களின் பட்டியல் இன்று இறுதி செய்யப்படுகிறது.

5. அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சித்தார்த் ராவத் முன்னேறியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

*************

### நிர்மலா சீதாராமன்

நாட்டில் பெட்ரோல் டீசல் மற்றும் விமான எரிபொருள் விலை உயராமல் இருப்பது உறுதிசெய்யப்படுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்காசிய நெருக்கடியை கருத்தில் கொண்டு, பெட்ரோல் டீசல் விமான போக்குவரத்து எரிபொருளில் நம் நாட்டில் எவ்வித பற்றாக்குறையும் இருக்க கூடாது என்பது பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக எடுத்துரைத்தார்.

இதன் அடிப்படையில் எண்ணெய் விநியோக நிறுவனங்களுக்கு உதவும் வகையில் பெட்ரோல் டீசல் மீதான கலால்வரி குறைக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் சாமானிய மக்கள் பாதிக்கப்படாத வகையில் அவற்றை இறக்குமதி செய்ய வழிகோலப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் வெளியிலிருந்து பொருட்களை பெற்று இந்தியாவில் சுத்திகரித்து அவற்றை ஏற்றுமதி செய்யும் சுத்திகரிப்பு நிறுவனங்கள் தற்போது கூடுதல் வரி செலுத்தும் நிலமை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் உள்நாட்டில் போதிய அளவு எரிபொருள் கிடைக்க வகை செய்யப்பட்டிருப்பதோடு அவற்றை ஏற்றுமதி செய்வது தடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஊரடங்கு தொடர்பான வதந்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்று கூறிய அவர், கோவிட் பெருந்தொற்று காலத்தில் இருந்தது போல ஊரடங்கு எதுவும் இருக்காது என்று உறுதியளித்துள்ளார்.

*************

ஹர்தீப்சிங் பூரி

சர்வதேச அளவில் எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் பெட்ரோல் டீசல் மீதான கலால் வரியை குறைத்து மத்திய அரசு தனது வரி வருவாயில் சமரசம் செய்துள்ளதாக மத்திய பெட்ரோலிய இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

உலகளாவிய கச்சா எண்ணெய் விலை உயர்வின் மத்தியில் நம் நாட்டை விலை உயர்விலிருந்து பாதுகாப்பதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த துணிச்சல் மிகு நடவடிக்கைக்காக பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கும் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இதனிடையே வணிக ரீதியிலான சமையல் எரிவாயு ஒதுக்கீடு மாநிலங்களுக்கு 70 சதவிகிதமாக அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

எஃகு மோட்டார் வாகனம், ஜவுளி இதர தொழிலாளர் பங்களிப்பு அதிகம் உள்ள தொழிற்சாலைகளுக்கு 20 சதவிகித ஒதுக்கீடு வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குழாய் வழி வாயு பயன்பாடு இல்லா தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*************

பெட்ரோல் டீசல் பாராட்டு

பெட்ரோல் டீசல் மீதான கலால் வரி குறைப்பு நடவடிக்கை உலகளாவிய நெருக்கடியிலிருந்து 140 கோடி இந்தியர்களை பாதுகாக்கும் தீர்க்கமான முடிவு என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் நெருக்கடியின் மத்தியிலும் பெட்ரோல் டிசல் மீதான கலால் வரி லிட்டர் ஒன்றுக்கு தலா 10 ரூபாய் அளவிற்கு குறைத்திருப்பதால் நேரடி விலை நிவாரணம் உறுதி செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள சாமானிய மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் நோக்கம் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெட்ரோல் டீசல் மீதான கலால் வரி குறைக்கப்பட்டுள்ள நடவடிக்கையை மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்பதோடு பிரதமருக்கு நன்றி தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ், இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஆகியோர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஏழை எளிய மற்றும் நடுத்தர வருமானப் பிரிவு குடும்பங்களை பாதுகாக்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் பெட்ரோலிய பொருட்களின் ஏற்றுமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

*************

பெட்ரோல் டீசல்

முன்னதாக எண்ணெய் நிறுவனங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பெட்ரோல் டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு இன்று குறைத்துள்ளது.

இதன்படி பெட்ரோல் மீதான கலால்வரி லிட்டர் ஒன்றுக்கு 13 ரூபாயிலிருந்து 3 ரூபாயாகவும்,

டீசல் மீதான கலால்வரி 10 ரூபாயிலிருந்து பூஜ்ஜியமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

*************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி எரிபொருள் கையிருப்பு, விநியோகம் உள்ளிட்டவை குறித்து அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் இன்றுமாலை காணொலி மூலம் ஆலோசனை மேற்கொள்கிறார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம், அஸ்ஸாம், மேற்குவங்கம் மாநில முதலமைச்சர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இம்மாநில தலைமை செயலர்களுடன் அமைச்சரவையின் செயலகம் தனியாக ஆலோசனைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*************

திமுக – அஇஅதிமுக

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யும் பணிகளில் அரசியல் கட்சிகள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன.

திமுக தலைமையிலான மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தொகுதி பங்கீட்டை தொடர்ந்து திமுக வேட்பாளர் பட்டியலை இறுதி செய்யும் பணியில் அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் 23 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையில் ஏனைய வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி இன்று வெளியிடுவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

*************

தேர்தல் ஆணையம்

இதனிடையே தமிழக சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாநிலத்தில் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை உறுதிசெய்யும் வகையில் முதியோர் இல்லங்களில் தபால் மூலம் வாக்களிக்கும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் தேர்தல் வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் இன்று நடத்தப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் செவிலியர் கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் இன்று நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டத்தில் திருநங்கைகளுக்கு மெகந்தி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

" எனது வாக்கு விற்பனைக்கு அல்ல" வாசகம் அடங்கிய பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

சிவகங்கை மாவட்டத்தில் அதிநவீன மின்னணு வீடியோ தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி பொற்கொடி கொடியசைத்து தொடங்கிவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

அரியலூர் மாவட்டத்தில் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ரத்தினசாமி இன்று தொடங்கிவைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் நடைபெறும் நாளான ஏப்ரல் 23 தேதி வயல்வெளியில் வரையப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.பிரசாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தின் அடையாளமான தேவாங்கு விலங்கை அடிப்படையாக கொண்டு 32 கிலோ காய்கறிகள் மற்றும் பழங்களால் உருவாக்கப்பட்ட பிரம்மாண்ட இலட்சினையை மாவட்ட தேர்தல் அலுவலர் அறிமுகம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

பறிமுதல்

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பண பட்டுவாடாவை தடுக்க 24 மணி நேரமும் பறக்கும் படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரபடுத்தியுள்ளனர்.

திருச்சி மாவட்டம் லால்குடியில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட நான்கு லட்சத்து 70 ஆயிரம் ரூபாயை பறக்கும் படையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

*************

டாஸ்மாக்

சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி தமிழ்நாட்டில் அடுத்த மாதம் 21, 22, 23 மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4 தேதிகளில் டாஸ்மாக் கடைகள் மூடப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அனைத்து வகையான மதுபான கூடங்களை மூட உத்தரவிடப்பட்டுள்ளதோடு, அவற்றை வாகனங்களில் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

*************

சிலிண்டர்

திருப்பூர் மாவட்டத்தில் அனுமதியின்றி பதுக்கிவைக்கப்பட்டிருந்த 200க்கும் மேற்பட்ட வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

*************

ராமநவமி

கும்பகோணம் அருள்மிகு ராமசுவாமி ஆலயத்தில் ராமநவமி தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது தஞ்சை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

கோவில்

அரியலூர் மாவட்டம் திருமழப்பாடி அருள்மிகு சுந்தராம்பிகை உடனாய வைத்தியநாதசுவாமி திருக்கோவில் நந்தியம் பெருமான் சுயசாம்பிகை தேவி திருக்கல்யாண உற்சவம் இன்று இரவு நடைபெறுகிறது.

இதற்கான விரிவான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

*************

டென்னிஸ்

அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சித்தார்த் ராவத் முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதியில் அவர் சக வீரர் திக் விஜய் பிரதாப்பை 7-6  6-3 என்ற நேர் செட்களில் வென்றார்.

*************

கிரிக்கெட்

ஐ.பி.எல்  20-20 கிரிக்கெட் போட்டிகள் பெங்களுருவில் நாளை தொடங்குகின்றன.

முதற்போட்டியில் நடப்பு சேம்பியன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு – சன் ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

குவ்ஹாட்டியில் வரும் 30ஆம் தேதி நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் – ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது